**வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனி – 2020/2021**

**------------------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு.**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் கணக்காய்வாளரின் பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான ஒரு கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**1.5. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | துன்முல்ல பிரதேசத்தில் 2 ரூட் 6.4 பேச்சர்ஸ் காணியில் கம்பனியின் தலைமை அலுவலக கட்டிடத்தினை நிர்ணயிப்பதற்காக ரூபா 739.4 மில்லியன் கிரயம் செலவு செய்யப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டிலிருந்து கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இதற்கிணங்க இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 சொத்துக்கள் சேதமடைதல் இற்கு இணங்க இக்கட்டிடம் சம்பந்தமாக சேதமடைதலுக்காக செம்மையாக்கல் செய்யப்பட்டு அதன் நியாய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கட்டிடத்தினை நிர்மாணிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய அனைத்து விபரங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் நிதிப்பிரச்சினையின் காரணமாக நிர்மாணம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வரையறுத்த எவன்காட் மெரிடைம் சேவிஸ் (தனி) கம்பனியால் வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனிக்கு எதிராக சிங்கப்பூரின் சர்வதேச மத்தியஸ்த நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பாக இழப்பீடு வகையில் 05 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்துமாறு கம்பனிக்கு 2016 நவம்பர் 24 ஆந் திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கம்பனி மேன்முறையீட்டினை சமர்ப்பித்துள்ளது என கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த இழப்பீட்டுப் பணத்தை செலுத்தாது இரு தரப்பிர்களையும் சமாதானப்படுத்தும் நடவடிக்கை செய்யப்பட்டுள்ளதனால் நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாட்டினை மேற்கொள்ளல் செய்யப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சம்பவத்தை சரியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் குறுங்கால நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் ரூபா 36,119,327 ஆக இருந்த போதிலும் இறுதி நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 36,489,966 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 370,639 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2021/2022 தொடர்பாக ரூபா 318,080 பெறுமதியானது இந்த ஆண்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2021/2022 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்பட்டுள்ளது. | மீதிகள் சரியாக கணிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் வித்தியாசத்தை ஒப்பீடு செய்து செம்மையாக்குதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021/2022 நிதி ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்தை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வித்தியாசம்<br>ரூபா | முகாமைத்துவத் தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| இருப்புக்கள், ஆயுதங்கள்,வெடி பொருட்கள், பொடி ஆமர், பிளாஸ்திக் ஹெல்மட் என்பவைகளின் மீதிகளின் வித்தியாசம் | 29,346,691 | 28,194,322 | 1,152,369 | 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான பௌதீக இருப்பு பெறுமதிக்கு இணங்க ஏடுகளில் உள்ள வெடிபொருட்கள் மற்றும் துவக்குகளின் பெறுமதியை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளுக்கிடயிலான வித்தியாசத்தை ஒப்பீடு செய்து தேவையான செம்மையாக்கல்களைச் செய்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br><br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளை பதிவழித்தல் | 1,841,407,543 | கடன்பட்டோர்களை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு உரிய விபரமான அறிக்கை, திறைசேரி அங்கீகாரம், தொடர்புபட்ட நாளேட்டு வவுச்சர் மற்றும் உரிய ஆவணங்கள் | பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கணக்குப் பிரிவு தெரிந்திருக்காததுடன் திறைசேரியின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அவ்வாறான தேவைப்பாடு இல்லை என திறைசேரியினால் சுற்றிக்கை வழங்கப்பட்டுள்ளது. | பதிவழிக்கப்பட்ட கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணபபட்ட ரூபா 557,280,454 தொகையான வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள், ரூபா 169,964,598 தொகையான வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வினால் தெரிவு செய்யப்பட்ட கடன்பட்டோர்கள் மற்றும் கடன் கொடுத்தோர்களுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டிருந்த போதிலும் இச்சந்தர்ப்பத்தின் போது அவ்வாறான நடைமுறைகளுக்காக எங்களிடம் வேண்டுதல் விடுக்கப்படாததனால் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்புதல் அனுப்பப்படாததனால் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுத்தல்களைச் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்துவது கம்பனியின் ஒரு பொறுப்பாக உள்ளதுடன் அனைத்து நிதிக்கூற்றுக்களினதும் இறுதித் திகதியில் மீதிகள் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய கடன் மீதியின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 68 நிறுவனங்களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 80,489,945 ஆக இருந்ததுடன் நீண்ட காலமாக தீர்த்துவைக்கப்படாத கடன் மீதியை அறவீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது கம்பனியால் அந்த நிறுவனத்துடன் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தற்போதுள்ள கடன்பட்டோர்களில் தற்பொழுது செயற்பாடற்ற கடன் பட்டோர்கள், தண்டப் பணம் முதலியவற்றை பகுப்பாய்வு செய்வதற்காக ஒரு விசேட குழு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான நடைமுறைகள் இன்னும் முடிவடையவில்லை. | உரிய கடன் மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 70,202,040 தொகையான வைப்பு மீதிகள் 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்ட மீதியாக உள்ளடதுடன் அம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செம்மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது எங்கள் கம்பனயில் ஒரு குழு நியமிக்கப்பட்டுகடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துதல், தண்டப்பணம் மற்றும் ஏனைய அறவீடுகளுக்காக செலவுத் தாள் மூலம் இன்வொயிஸ் பெறுமதிகளை சரிசெய்தல், மற்றும் பாதுகாப்பு வைப்புக்களை உரிய கடன்பட்டோர் மீதிகளுக்கு எதிரீடு செய்வது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நீண்ட காலமாகக் காணப்பட்டுவரும் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது வருமானத்திற்குச் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இது சம்பந்தமான ஒரு கணக்கீட்டுக் கொள்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 6.5.1 ஆம் பந்தி | கம்பனியால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மற்றும் பிரதிகள் உரிய அமைச்சிற்கும் | 2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்தல் நீண்ட காலம் தாமதத்தின் காரணமாக 2020/2021 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கும் அந்த தாமதம் பாதகமான தாக்கத்தை | நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்களைத கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான (பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட) நிதிக்கூற்றுக்கள் 01 ஆண்டு 06 மாதங்கள் தாமதித்து 2022 திசெம்பர் 02 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | ஏற்படுத்தியுள்ளது. 2020/2021 ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கிடைத்த உடன் 2021/2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியும் என்பது எங்களின் அபிப்பிராயமாகும். | |
| (ii) | 6.5.3 ஆம் பந்தி | 2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பாறாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | 2017/2018, 2018/2019 ஆகிய ஆண்டறிக்கைகள் தற்பொழுது பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்க்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் 2019/2020 ஆண்டிற்க்கான ஆண்டறிக்கையானது தயாரித்து பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை பத்திரமும் கணக்காய்வு ஐயவினாவும் மற்றும் அதன் பதில்கள் தமிழ் மொழி பெயர்ப்பிற்க்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கைகளை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 7.4.5 ஆம் பந்தி | ஒரு நிலையான பதிவேடு பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை லொஜிஸ்டிக் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். | ஒரு நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பேணுவதற்கும் நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 9.3 ஆம் பந்தி | கம்பனி தோற்றுவிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை பதவியணிக்காக ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிலிருந்து மனித வளங்கள் | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையினைத் தயாரிப்பதற்கும் அதனை அங்கீகரித்துக் கொள்வதற்குமான |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையினைத் தயாரித்து அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரித்துக்கொள்ளப் படவில்லை. | முகாமைத்துவத்திற்குரிய அனைத்து செயற்பாடுகளையும் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பட் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை தாமதமின்றி செய்யப்பட வேண்டியதுடன் காணப்படும் சட்டவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 132,062,916 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 271,577,352 ஆகும். அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் ரூபா 139,514,436 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நேரில் செலவுகள் மற்றும் நிதிச் செலவுகள் முறையே 62 சதவீதத்தினாலும் 305 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2. பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான எரிபொருள் செலவுகள் முறையே ரூபா 1,426,825 மற்றும் ரூபா 3,113,920 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அச்செலவுகள் 118 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் சம்பளம் முறையே ரூபா 41,540,074 மற்றும் ரூபா 108,972,586 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அச்செலவுகள் 162 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3. விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபமும் தேறிய இலாபமும் முறையே 6.44 சதவீதத்தினாலும் 11.98 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. மேலும் நடைமுறை விகிதமும் விவைச் சொத்துக்கள் விகிதமும் முறையே 3.10 மற்றும் 3.05 ஆக இருந்தன. மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் பிரதான வருமான மூலங்களானது உள்நாட்டு மற்றும் சமுத்திர பாதுகாப்பு சேவைகளை வழங்குவதாக இருந்த போதிலும் அந்த வருமானத்தை முறையாக இன்வொயிஸ் தயாரித்து உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல் மற்றும் உரிய காலத்தில் அறவீடு செய்தல் அல்லது அந்த நிறுவனங்களுடன் ஏற்படும் | கணனி முறைமையினூடாக மாத்திரம் இன்வொயிஸ் வழங்கப்படுதல், வழங்குவதற்கு முன்னர் உரிய பிரிவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல், பற்றுச் சீட்டுக்களை உள்ளீடு செய்யும் போது உரிய செலவுத் தாள்களுக்காக உரிய பிரிவுத் தலைவரின் அங்கீகாரத்தினைப் | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை இனங்கண்டு அவற்றினை தொடர்ச்சியாக அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| இணக்கமின்மைகளை இனங்கண்டு முகாமைத்துவம் செய்வதற்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுஜறகளை இனங்காண்தல் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. இது உரிய காலத்தில் நிலுவைப் பணங்களை அறவீடு செய்வது தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | பெற்றுக்கொள்ளல், பணத்தை சேகரிக்கும் செயல் முன்னேற்றத்திற்கும் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனத்திற்குமாக உயர் முகாமைத்துவத்தின் மூலம் மற்றும் விசேட கடன் சேகரிக்கும் கூட்டங்களின் போதும் கவனம் செலுத்துதல் மற்றும் நீண்டகால கடன்பட்டோர்களுக்கு ஞாபகப்படுத்தல் கடிதங்களையும் அழைப்பாணைகளையும் அனுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் பிரதான அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக ஒரு கட்டிடம் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ரூபா 337 மில்லியனுக்கு அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைகளை பின்பற்றாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்தை கொள்வனவு செய்ததன் பின்னர் 2020 நவம்பர் 19 ஆந் திகதி அதன் நிகழ்கால சந்தைப் பெறுமதி ரூபா 275.5 மில்லியனுக்கு மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க அரசாங்கத்தின் மதிப்பீட்டு விலையினை விட ரூபா 61.5 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிட்ட பெறுமதியினை விட ரூபா61.5 மில்லியன் அதிக பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கையினை விட 118 சதவீதமான மிகைப் பெறுமதிக்காக இலங்கை வங்கியின் மூலம் கடன் பணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்வதற்கு முன்னர் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகையாக செலுத்தியமை சம்பந்தமாக பரிசீலனைகளை மேற்கொண்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 17 ஆந் திகதிய RALL/Armoury/Bewrd/2022 ஆம் இலக்க ஐந்து உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட ரூபா 5,394,600 பெறுமதியான 108 Body Armours களினதும் ரூபா 1,409,530 பெறுமதியான 94 Ballistic Helmets களினதும் பற்றாக்குறைகளை அதனுடன் தொடர்புபட்ட 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டிருந்தும் அக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனுடன் தொடர்புபட்ட 03 உத்தியோகத்தர்கள் மரணமடைந்துள்ளார்கள் எனவும் 05 உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து நீங்கியுள்ளார்கள் எனவும், | சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக நடவடிக்கைகளை துரிதமாக எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைத்த பொருட்களின் ஒப்பந்தம் சம்பந்தமாக முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையான உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மிகவும் சிறந்த சந்தைப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக பெறுகை நடைமுறையினை மிகவும் ஆக்கபூர்வமாக திட்டமிட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | -மேற்படி- |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் நல்லாட்சிக்கான அரசாங்க தொழில் முயற்சி வழிகாட்டிக் கோவையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளின் செயற்திறனை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த நான்கு ஆண்டு கூட்டிணைந்த திட்டத்தில் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கூட்டிணைந்த திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த பாதீட்டிற்கு கேடரிங் மற்றும் சிற்றுண்டிச்சாலை பிரிவிற்குரிய விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் பாதீடானது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2020/2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கூட்டிணைந்த திட்டம் உள்ளடக்கப்பட்டள்ளது. அந்த பாதீட்டிற்கு கேட்டரின் மற்றும் சிற்றுண்டிச்சாலை பிரிவிற்குரிய விபரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் செலவுவுகளுக்குமிடையேயான முரண்பாடுகளைக் குறைத்து பாதீட்டினை நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |